செ.வெ.எண்:14 நாள்:05.06.2018

**கரூர் மாவட்டம் முழுவதும் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்படும் என அமராவதி ஆற்றங்கரையில் துப்புரவு பணிகளை தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்டம், பசுபதிபாளையம் அருகிலுள்ள அமராவதி ஆற்றங்கரையில் வனத்துறை, பள்ளிக்கல்வித்துறை, சுற்றுச்சூழல் மன்றங்கள், கரூர் ரோட்டரி டெக்சிட்டி மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் இணைந்து உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு துப்புரவு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.06.2018) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு ஆண்டும் சுற்றுச்சூழலை பேணிக்காத்திடும் பொருட்டு ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு இத்தினம் உலகளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. மனித நடவடிக்கைகளால் சூழலில் ஏற்பட்டு வரும் விரும்பத்தகாத மாற்றங்களும் அதனால் மனித குலத்திற்கும் புவிக்கும் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகளுமே இத்தகைய செயல்பாடுகளை தொடர்ந்து செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன. இந்த ஆண்டிற்கு நெகிழி மாசுபாட்டை முறியடிப்போம் (Beat the Plastic Pollution) என்பதை கருப்பொருளாகக் கொண்டு பணிகள் இன்று (05.06.2018) தொடங்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து நீர் ஆதார மையங்களான குளங்கள், ஏரிகள், வாய்க்கால் ஆகிய இடங்களில் ப்ளாஸ்டிக் கழிவுகளை முதல்கட்டமாக அப்புறப்படுத்திடவும், இப்பகுதிகளிலுள்ள ப்ளாஸ்டிக் கழிவகளை அப்புறப்படுத்துவதற்கான விழிப்புணர்வை கரூர் மாவட்ட சூழல்மன்ற மாணவ, மாணவிகள், சாரணர் படை, நாட்டுநலப்பணித்திட்டம், செஞ்சலுவைச்சங்க மாணவ, மாணவிகள், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், வனத்துறை அலுவலர்கள், சிறப்பு விருந்தினர்கள், தன்னார்வலர்கள், கரூர் நகராட்சி பணியாளர்கள் ஆகியோர்களைக் கொண்டு இந்த பணி தொடங்கப்படுகின்றது. இந்த பணி தொடர்ந்து நடைபெறும். சேகரிக்கப்படும் ப்ளாஸ்டிக் கழிவுகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் ப்ளாஸ்டிக் தார்சாலை அமைக்கும் பணிக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

ப்ளாஸ்டிக் கேரி பைகளுக்கு மாற்றாக துணிப்பை பயன்படுத்த வேண்டும் என்பதற்காக கோ கிரீன் என்ற துணிப்பை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு சமூக அமைப்புகள் தன்னார்வலர்களை இணைத்து ப்ளாஸ்டிக் மாசுபாட்டை முறியடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இன்று இந்த பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்மூழல் செயல்பாடுகளை செய்ய வேண்டியது குறிப்பிட்ட துறைகள் சாந்தது என்பதை விடுத்து அனைத்து துறைகளும், பொதுமக்களும் இணைந்து செயல்பட்டால் இந்த புவியின் அழகை எதிர்கால தலைமுறையினருக்கு

எடுத்துச்செல்ல எளிதாக இருக்கும். ப்ளாஸ்டிக் பயன்பாட்டை குறைக்கும் வகையில் மாணவர்களே தயார் செய்து காகிதப்பைகள் பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழக அரசின் பல்வேறு சுற்றறிக்கைகளின் அடிப்படையில் நீராதார இடங்களான குளங்கள், ஏரிகள், அணைகள் போன்ற இடங்களிலும், நீர் வழித்தடங்களான ஆறுகள், கால்வாய்கள், வாய்க்கால்கள் போன்ற இடங்களிலும் ப்ளாஸ்டிக் மாசுபாட்டை முறியடிப்பதோடு மரக்கன்றுகளை நட்டு கரைகளை பலப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பணிகளில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட்டு கரூர் மாவட்டத்தை வளம் மிகுந்த மாவட்டமாக உருவாக்க நல்ல சுற்றுச்சூழலை உருவாக்கிட அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொள்வோம் என தெரிவித்தார்.

பின்னர் சுற்றுச்சூழல் குறித்த உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அதனை அனைவரும் பின்தொடர்ந்து ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி எஸ்.கவிதா, மாவட்ட வன அலுவலர் திரு.அன்பு, வருவாய் கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.அ.செந்தில், கரூர் ரோட்டரி டெக்சிட்டி தலைவர் திரு.வெங்கடேஷ், வனச்சரகர்கள் திரு.நடராஜன், திரு.ரவி, திரு.மனோஜ், திரு.மனோகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**